ஆலையடிவேம்பு பிரதேச சபை

அம்பாறை மாவட்டம்

---------------------------------------

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 15 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 03 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 24 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து ஆலையடிவேம்பு பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 8,250 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் வங்கிக்கணக்கிற்கு நேரடியாக பெறப்பட்ட ரூபா 232,185 தொகை இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கியினால் சபையின் பெயரில் நேரடியாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 27,083 தொகை இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட இறைச்சிக் கடை குத்தகைப் பணம் ரூபா 698,400 வருமான கணக்கிற்கு மாற்றப்படாமல் வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட ரூபா 89,500 தொகை வருமானக் கணக்கிற்கு மாற்றப்படாமல் வைப்புக் கணக்கில் காணப்படுகின்றது.

1.3.3 பெறவேண்டிய கணக்கு

மரணமடைந்த ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 39,900 கடன் மீதியை அவரின் மரணப் பணிக்கொடையிலிருந்து அல்லது வாரிசுக்காரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| காணிகள் மற்றும் கட்டிடங்கள் | 104,183,166 | காணி கட்டிடப் பதிவேடு, நிலையான சொத்துக்கள் பதிவேடு, சொத்துக்கள் பற்றிய விபரமான பட்டியல் மற்றும் மெய்மைய்வு அறிக்கைகள் |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 167,466 | |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 1,871,290 | |
| அலுவலக உபகரணங்கள் | 114,240 | |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 139,525 | |
| நூலகப் புத்தகங்கள் | 1,390,525 | நூலகப் புத்தக பதிவேடு |

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 ஜனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பிரதேச சபையின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காகவும், மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழில்நுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகளின் அத்தியாயம் X இன் பிரிவு 217 | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு
------------------------

2.1 நிதி விளைவுகள்
----------------------------

சமர்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 3,523,627 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 957,526 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 2,566,150 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்
-------------------------------------------

2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்
--------------------------------------------

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றிற்கு வீத வரிகள் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 ஏனைய வருமானம்
--------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 03 விளம்பரப் பலகைகளுக்காக அறவிடப்படவேண்டிய ரூபா 82,960 தொகையான அனுமதிப்பத்திரம் மற்றும் பாவனைக் கட்டணங்களை சபை இழக்க வேண்டி ஏற்பட்டது.

(ஆ) 1988 முதல் 2012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகைப் பணமாகிய ரூபா 546,318 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(இ) 2002 முதல் 20012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக காணப்பட்ட வியாபார வரி அரசிறைக் கடனாளிகளின் ரூபா 31,480 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஈ) 2010 மார்ச் 05 ஆம் திகதிய 1644 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவுறுத்தல்களின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிறுவப்பட்ட 02 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு அறவிடப்படவேண்டிய ரூபா 164,000 தொகையான உரிமைக்கட்டணத்தை 2014 யூலை 10 ஆம் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

---

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டன.

(அ) நீதிமன்றத் தண்டப்பணம்

---

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்திடமிருந்து 2013 திசெம்பர் 31 இல் கிடைக்கவேண்டிய ரூபா.2,220,803 தொகையினை கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முத்திரைக் கட்டணம்

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணத் தொகையான ரூபா.1,971,148 பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவ பலவீனம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டு 2012 ஆம் ஆண்டின் இறுதிவரை வைப்புப் கணக்கில் காட்டப்பட்டிருந்த பெறுமதி சேர் வரி மற்றும், பண்டங்கள் சேவைகள் வரியாகிய ரூபா 433,811 மொத்த தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பு ரூபா 167,454 தொகையை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------------

4.1 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) வருமான முகாமைத்துவம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு